செய்தி வெளியீடு எண். 16-2019 நாள்: 13.10.2019

**விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடிகளில் பணிபுரிய உள்ள அலுவலர்களுக்கு இரண்டாம் கட்டமாக நடைபெறும் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.சினுவீரபத்ருடு.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.**

******

விழுப்புரம் மாவட்டம் அய்யூர் அகரம் நாகர் பப்ளிக் மேல்நிலைப் பள்ளியில் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடிகளில் பணிபுரிய உள்ள அலுவலர்களுக்கு இரண்டாம் கட்டமாக நடைபெறும் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.சினுவீரபத்ருடு.இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.10.2019) பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தெரிவித்ததாவது.

வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு நடைபெறும் நாளுக்கு முதல் நாளே வாக்குச்சாவடிக்கு சென்று வாக்குப்பதிவுக்கு தேவையான மின்னணு இயந்திரங்கள் மற்றும் ஆவணங்கள் மற்றும் உரிய படிவங்கள் வரப்பெற்றதை பூர்த்தி செய்து வைத்துக்கொண்டு வாக்குப்பதிவு நாளன்று காலை 6 மணிக்கே வாக்குச்சவாடியில் மின்னணு இயந்திரங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் தயாராக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வாக்காளர்கள் வாக்களித்த பின்னர் வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பான முறையில் வாக்கு எண்ணும் மையத்திற்கு அனுப்பி வைக்கவும். தவறாமல் அனைத்து தேர்தல் பயிற்சி வகுப்புகளையும் கலந்துகொண்டு தேர்தல் ஆணையம் பயிற்சிகளில் வழங்கும் அறிவுறைகளை தவறாமல் பெற்று சிறப்பாக தேர்தல் பணி ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.மு.சந்திரசேகர், முதன்மை கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, உதவி ஆட்சியர் (கலால்) திரு.மோகன், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.ஆனந்தன் (விழுப்புரம்), திருமதி.கிருஷ்ணப்ரியா (திண்டிவனம்), திருமதி.செல்வி (செஞ்சி(பொ)), விக்கிரவாண்டி வட்டாட்சியர் திரு.பார்த்திபன், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.